திணைக்களச் சுற்றறிக்கை இலக்கம்: 05/2003

எனது இலக்கம்: எஸ்/1/83

திகதி: 2003.06.19

அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் /

பிரதேச செயலாளர்கள் மற்றும்,

மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்.

## பிறப்புச் சான்றிதழ் இல்லாத நபர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொடுப்பதற்காக வெளிநாட்டு அமைப்புகள் / அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து ஆரம்பிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்குவதற்காகவும், பதிவு செய்யப்படாத பிறப்புகளைப் பதிவு செய்வதற்காகவும் வெளிநாட்டு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், அந்நிறுவனங்களிடம் நிதி மற்றும் ஏனைய வசதிகளுக்காகக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

02. இத்தகைய வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைப் நான் மிகவும் பாராட்டுகினறேன். எனினும், இத்திட்டங்களினால் பொதுமக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து திணைக்களத்திற்கு முறையாக அறிக்கையிடப்படுவதில்லை. இதன் காரணமாக, இத்திட்டங்கள் தொடர்பான தரவுகளைத் திணைக்களத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையில் சேர்த்துக்கொள்வது கடினமாக உள்ளது.

03. இவ்வாறான வேலைத்திட்டங்கள் திணைக்களத்தின் முழுமையான அறிதலின்றி நடைபெறுவதால், இத்திட்டங்களுக்குத் திணைக்களத்தினால் வழங்கக்கூடிய ஒத்துழைப்புகளை முறையாக வழங்குவதில் சிக்கல்கள் எழுகின்றன.

04. எனவே, இவ்விடயத்தின் கீழ் ஏதேனும் ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிநாட்டு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடம் உதவி கோரப்படும் போது, அக்கோரிக்கைகள் அனைத்தும் பதிவாளர் நாயகம் ஊடாகவே உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தெரிவித்துக்காள்கினறேன்.

(ஒப்பம்)

எல். கே. ரத்னசிறி

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – தகவலுக்காக.
2. இலங்கை பிரதிநிதி, யுனிசெப் நிறுவனம் – தகவலுக்காக.
3. அனைத்து மாவட்டச் செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள் – தகவலுக்காக.
4. வலயப் பொறுப்பு உதவிப் பதிவாளர் நாயகங்கள்.